# மே – 06 – திங்கள்

## அழிந்துபோகும் உணவுக்காக உழைக்க வேண்டாம். யோவா6:27

## முதல் வாசகம் : திருத்தூதர் பணி 6 : 8 – 15

அந்நாட்களில், இஸ்தேவான் அருளும் வல்லமையும் நிறைந்தவராய் மக்களிடையே பெரும் அருஞ்செயல்களையும் அரும் அடையாளங் களையும் செய்து வந்தார். அப்பொழுது உரிமையடைந்தோர் எனப்படுவோரின் தொழுகைக்கூடத்தைச் சேர்ந்த சிலரும் சிரேன், அலக்சாந்திரியா நகரினரும் சிலிசியா, ஆசியா மாநிலத்தவரும் இஸ்தேவனோடு வாதாடத் தொடங்கினர். ஆனால் அவரது ஞானத்தையும் தூய ஆவி வாயிலாக அவர் பேசிய வார்த்தைகளையும் எதிர்த்து நிற்க அவர்களால் இயலவில்லை. பின்பு அவர்கள், "இவன் மோசேக்கும் கடவுளுக்கும் எதிராகப் பழிச்சொற்கள் சொன்னதை நாங்கள் கேட்டிருக்கிறோம்" என்று கூறச் சிலரைத் தூண்டிஇ விட்டனர். அவ்வாறே அவர்கள் மக்களையும்இ மூப்பர்களையும் மறைநூல் அறிஞர்களையும் அவருக்கு எதிராகக் கிளர்ந்தெழச் செய்தார்கள். உடனே அவர்கள் எழுந்து வந்து அவரைப் பிடித்துத் தலைமைச் சங்கத்துக்கு இழுத்துச் சென்றார்கள். மேலும் பொய்ச்சாட்சிகளைக் கொண்டுவந்து நிறுத்தினார்கள். அவர்கள், "இந்த மனிதன் இத்தூய இடத்தையும் திருச்சட்டத்தையும் எதிர்த்து ஓயாமல் பேசி வருகிறான்" என்று கூறினார்கள். மேலும் அவர்கள், "நசரேயராகிய இயேசு இந்த இடத்தை அழித்துவிடுவார் என்றும், மோசே நமக்குக் கொடுத்திருக்கிற முறைமைகளை மாற்றிவிடுவார் என்றும் இவன் கூறக்கேட்டோம்" என்றார்கள். தலைமைச் சங்கத்தில் அமர்ந்திருந்த அனைவரும் அவரை உற்றுப் பார்த்தபோது அவரது முகம் வானதூதரின் முகம்போல் இருக்கக் கண்டனர்.

**பதில்பாடல்:** ஆண்டவர் திருச்சட்டப்படி நடப்போர் பேறுபெற்றோர்

## நற்செய்தி : யோவான் 6 : 22 – 29

இயேசு ஐயாயிரம் பேருக்கு உணவு அளித்தபின், சீடர்கள் புறப்பட்ட கரையிலேயே மறுநாளும் மக்கள் கூட்டமாய் நின்று கொண்டிருந் தார்கள். முந்தின நாள் ஒருபடகைத்தவிர வேறு படகு எதுவும் அங்கு இல்லை என்பதையும் அதில் இயேசுவின் சீடர்கள் மட்டும் போனார்களே அன்றி இயேசு அவர்களோடு அப்படகில் ஏறவில்லை என்பதையும் அவர்கள் கண்கூடாகப் பார்த்திருந்தார்கள்.அப்போது, ஆண்டவர் கடவுளுக்கு நன்றி செலுத்திக் கொடுத்த உணவை மக்கள் உண்ட இடத்திற்கு அருகில் திபேரியாவிலிருந்து படகுகள் வந்து சேர்ந்தன.இயேசுவும் அவருடைய சீடரும் அங்கு இல்லை என்பதைக் கண்ட மக்கள் கூட்டமாய் அப்படகுகளில் ஏறி இயேசுவைத் தேடிக் கப்பர்நாகுமுக்குச் சென்றனர்.அங்கு கடற்கரையில் அவர்கள் அவரைக் கண்டு, "ரபி, எப்போது இங்கு வந்தீர்?" என்று கேட்டார்கள்.இயேசு மறுமொழியாக, "நீங்கள் அரும் அடையாளங்களைக் கண்டதால் அல்ல, மாறாக, அப்பங்களை வயிறார உண்டதால்தான் என்னைத் தேடுகிறீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். அழிந்துபோகும் உணவுக்காக உழைக்கவேண்டாம். நிலைவாழ்வு தரும் அழியாத உணவுக்காகவே உழையுங்கள். அவ்வுணவை மானிடமகன் உங்களுக்குக் கொடுப்பார். ஏனெனில் தந்தையாகிய கடவுள் அவருக்கே தம் அதிகாரத்தை அளித்துள்ளார்" என்றார்.அவர்கள் அவரை நோக்கி, "எங்கள் செயல்கள் கடவுளுக்கு ஏற்றவையாக இருப்பதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்கள்.இயேசு அவர்களைப் பார்த்து, "கடவுள் அனுப்பியவரை நம்பவதே கடவுளுக்கேற்ற செயல்" என்றார்.

**தியானம்:** உணவு எமது நாளாந்த வாழ்விற்கு அத்தியாவசியமானது. ஆனால் நாம் அந்த உணவில் மட்டுமே தங்கி வாழ முடியாது. ஒரு சிலர் உணவை தயாரிக்க பல மணி நேரத்தை செலவிடுவர். நாம் வாழ்வதே இந்த உணவிற்காக, அதனால் தானே உளைக்கின்றோம் என்று நினைப்பவர்களும் உண்டு. ஆனால் இன்றைய நற்செய்தி மூலம் யேசு உணவிற்காக உழைக்க வேண்டாம் என்று சொல்வது சற்று நெருடலாக இருக்கும். இன்றைய கால கட்டத்தில் மக்கள் இயற்கை உணவுகளை (biological food) நாட ஆரம்பித்து விட்டார்கள். அவை விலை கூடியவையாக இருந்தாலும் நமது உடல் நலத்திற்கு நல்லது என்று நினைக்கின்றார்கள். பலவகையான மருந்துகளை பாவிக்கின்ற உணவுகளினால் பலவிதமான நோய்கள் வருவதாக நம்புகின்றர்கள். தம்மீது அதிக அக்கறை எடுத்துக்கொண்டு ஒருவிதமான நோய்களும் இல்லாதவர்கள் கூட மிக இளம் வயதில் மரணத்தை தழுவ, எந்த அக்கறையும் எடுக்காதவர்கள் நீண்ட நாட்கள் வாழ்கின்றார்கள். எனவே வாழ்வு என்பது எமது கைகளில் இல்லை. அது கடவுளின் கைகளில் உள்ளது. அவரது வார்த்தையில் உள்ளது. அதன்படி நாம் வாழ்வதில் உள்ளது. முதல் வாசகத்தில் புனித ஸ்தேவான் கடவுளின் வார்த்தையை வல்லமையுடன் போதிப்பதை பார்க்கின்றோம். சமுதாய தலைவர்கள் அவரை தடுக்க நினைத்தாலும் அது முடியாமல் போக பொய் குற்றம் சாட்டுகின்றார்கள். உண்மை எப்போதும் உறங்குவதில்லை. எனவே இவ்வுலக தேவைகளுக்காக மட்டும் நாம் உளைக்காது, எமது ஆன்ம தேவைக்காக நாம் உளைக்க முற்படுவோம். உணவைக் கண்ட மக்கள் யேசுவை தேடி போனது போல் நாம் போகாமல் எமது நிலையான வாழ்வை தேடி நாம் பயணிப்போம்.